**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF
Calender :
Miscellaneous : CC Case No.59/2021
Preliminary Register :
Sessions : **P.W.2**

Deposition of witness for Prosecution Defence Court

Name : திரு.செல்வராஜ்
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21.06.2022.

<u>முதல் விசாரணை</u>:–

நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2. சுமார் ஒரு வருடத்திற்க ஒரு நாள் நான் ஊரிலிருந்தபோது இரவில் போலீசார் வந்தார்கள். நேரம் எனக்கு ஞாபகமில்லை. ஒரு எழுதிய பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். நாங்கள் சண்டை நடந்ததற்கு வந்ததாக சாட்சி கையெழுத்து போடச்சொன்னார்கள் போட்டேன். நான் ஊராட்சி மன்ற தலைவர் வீட்டிற்கு முன்பு வைத்து கையெழுத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

நான் படிக்கவில்லை. நான் கையெழுத்து போட்ட ஆவணம் என்ன ஆவணமென்று எனக்கு தெரியாது. அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து போட்டேன்.